எடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள். இமையமுடா உழைப்பால் தமிழகத்தில் கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, போக்குவரத்து வசதி என்று இப்படி சகலத்தையும் சாதித்துக்கொண்டிருக்கும் சகலகலா வல்லவர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களின் நன்றி உணர்வோடு, என்னுடைய நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிவிப்பு

பல்கலைக்கழகங்களின் மேலாண்மைக் குழுமம், ஆட்சிமன்றப் பேரவை, கல்விக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் அமைப்புகளில் உறுப்பினர்களாகப் பணிபுரிய அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் - திரு. டி. ஜெயக்குமார்

மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை - திரு. சு. பழனிச்சாமி

திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு - திரு. எஸ்.கே. ரமேஷ்

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக ஆட்சி மன்றப் பேரவை - திரு. வி.என்.பி. வெங்கட்ராமன்

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் 7-2-2016 வரை ஆகும்.

திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை ஆகியவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 25-8-2014 வரை ஆகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அத்துடனோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.*

நண்பகல் 12-00

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாண்டுகள் முத்தான பல திட்டங்களை மக்களுக்குத் தந்து, நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைத் தந்த மாதரசியே, கடந்த ஆட்சியாளர்களால் பறிபோன தமிழர்களின் உரிமையை மீட்டெடுத்த பேரரசியே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் விரும்பி போற்றும் எங்கள் குலவிளக்கே, மாசற்ற மணிவிளக்கே, ஏழை வாழ்விலே ஒளியேற்ற நாள்தோறும் பல நல்ல திட்டங்களைத் தரும் திராவிடத் திருவிளக்கே, என்றும் எங்கள் குடும்பத்தை வாழவைக்கும் எங்கள் இதய தெய்வமே, இந்தியத் திருநாட்டில் வாழும் மனித தெய்வமே, கழகத்தின் நிரந்தரப் பொதுச்*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS